# டாபிந்து

பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர்: 40 | இதழ்: 01 | 2023 புரட்டாதி மாத பதிப்பு


# 39 ஆண்டு மாபெரும் எல்லையற்ற சக்தி




உழைப்பின் பெறுமதியை சொற்பமாக கருதும் யுகத்தில், தொழிலாளர் உரிமைகளும் தடைசெய்யப்பட்ட ஓர் சொற்பதமாக இருந்தபோது, சுதந்திர வர்த்தக வலயத்தில் தனது வியர்வையை சிந்தி, பெண் உழைப்பிற்கு ஓர் பெறுமதியை பெற்றுக் கொடுப்பதற்கு, சுயாதீன குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் முயற்சியின் உச்சமே டாபிந்துவாகும். அருட்சகோதரி. விவியன் பர்னாந்து, குமுதினி ரோசா, எச்.ஐ. சமன்மலி ஆகிய மூவரின் தலைமையின் கீழ் டாபிந்துவின் முதற் பத்திரிகையானது, 1984ம் ஆண்டு பதிக்கப்பட்டது. அன்று தொடங்கி இன்று வரை, 39 ஆண்டுப்பயணம் என்பது சுலபமான விடயமன்று, மாறாக, பல்வேறு தடைகள், தோல்விகளையும் தாண்டி, வெற்றி மற்றும் முன்னேற்றத்தினூடாக டாபிந்து உயிரூட்டப்பட்டிருப்பது எனக் கூறுவதில் எந்தவெரு ஐயமுமில்லை.

திறந்த பொருளாதார கொள்கையினூடாக அந்நிய செலாவணியை ஈட்டும் பிரதான வருவாயாக சுதந்திர வர்த்தக வலயமானது அரசாங்கத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டதுடன், 1978ம் ஆண்டு பிரதான சுதந்திர வர்த்தக வலயமானது கட்டுநாயக்கவில் தோற்றம் பெற்றது. கைத்தொழிற்பொருளாதாரத்தில் பெரும்பங்கு வீழ்ச்சியை அனுபவித்த குடும்பத்தில் இருந்து வந்திருந்த பெண் தொழிலாளர்களே பெரும்பாலும் இங்கு பணிக்காக அமர்த்தப்பட்டனர். வேலையின்மைக்கு ஓர் தீர்வாக ஆட்சியாளர்களினால்

02ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 02 - அணிந்துரை / 1ம் பக்க தொடர்ச்சி / வெளிநாட்டுச் செய்திகள்

பக்கம் 03 - புத்தக வாசிப்பு / எமது எண்ணம்

பக்கம் 04-05 - வாழ்த்துப் பகுதி

பக்கம் 06-07 - எமது பணி

பக்கம் 08 - ஒருவருடகால பயணம்

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
Facebook : Dabindu Collective Sri Lanka


# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாளையை இழந்த நாடு

மிகவும் கசப்பான அனுபவங்களைத் தாண்டி, டாபிந்து கூட்டமைப்பானது 2023ம் ஆண்டு புரட்டாதி மாதம் தனது 39வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இந்த தசாப்தங்களில், நாம் வந்த பாதையில், அரசியல், பொருளாதாரம், சமூக கலாசாரங்களுக்கு மத்தியில் ஏற்பட்ட வேறுபாடுகள் காரணமாக நாட்டுப் பிரஜைகளுக்கு அரசியலமைப்பு, சட்டத்தின் ஆட்சி ஜனநாயகம் போன்றவற்றை அனுபவிப்பதற்குள்ள வாய்ப்பு பறிக்கப்பட்டது. வேலைநிறுத்தம், போராட்டங்களினூடாக தமது உரிமைகளை வென்றெடுக்க நேர்ந்தமை ஓர் சாதாரண செயலாக இருந்தது. முன்னோடி வகிக்கும் தலைவர்கள் வெவ்வேறு கட்டளைகளைப் பிறப்பித்து, அடக்குமுறையை மிகவும் சுலபமான முறையில் நடத்திச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டமையினால் மக்கள் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட பாதிப்பை தடுக்க முடியாதிருந்தது. பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்றின் மூலம் கீழ்மட்ட மக்களின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உற்பத்தி செயற்பாடு தொடர்பாக எந்தவொரு மதிப்பீடும் இல்லாத பலவீனமான ஆட்சியாளர்களினாலே ரூபாயின் மதிப்பு இழக்கப்பட்டு, பண இருப்பபு பற்றாக்குறைக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. அதனாலேயே குழந்தைகள் கல்வி வசதியை பெற்றுக் கொடுக்க முடியாமல், நோயாளிகளுக்கு ஔடதமன்றி, எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் நின்றவாறே தமது உயிரை பறிகொடுப்பதற்கு இந்நாட்டு மக்களுக்கு நேர்ந்தது.

வரிச்சுமை, கடன்சுமைகளை பாதிக்கப்பட்ட மக்களினம் மேல் சுமத்தி, வரியை அதிகரிக்கும் செயற்றிட்டம் தொடர்பில் மக்களை அறிவுறுத்தாது, வரிச்சுமையை செலுத்தாது விடும் மேல்மட்ட வகுப்பிலுள்ள அனைத்து வசதிகளையும் அனுபவிக்கும் பிரிவினர் மீது வரிச்சலுகைகளை வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிகபடியான வாக்குகளான 50வீதம் தொடக்கம் 100வீதம் வரை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு நாட்டின் பாரிய கொடுப்பனவான ஊழியர் சேமலாப நிதியை கொள்ளையடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், உரிமையாளரை மகிழ்ச்சியூட்டுவதற்காக தொழிலாளர் சட்டததை திருத்தியமைத்து, காலணித்துவ பரிமாணத்திற்கு நாட்டை இட்டுத்தள்ளி, IMF கடனுக்குள் நெருக்கடியை அனுபவிக்கும் மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கி, 1966ம் ஆண்டு முதல் 17வது முறையாக கடனைப் பெற்று, முகாமைத்துவத்தின் தரத்தை காண்பிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் தவறானது என்பதை இப்பலவீனமான அரசாங்கம் காட்டியுள்ளது.

பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தனியாக பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு, பொது பிரச்சினையை கருதாது, மேலாதிக்கத்திற்கு எதிரான தீர்மானங்களை மேற்கொண்டு செயற்படுவதனால் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நேரிடுமென பாதிக்கப்பட்ட வகுப்பினருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**டாபிந்துவின் 39 ஆண்டு...** 01ஆம் பக்கத் தொடர்ச்சி

காண்பிக்கப்பட்ட இத்தொழிலுக்கு தொழில்கோரி தனது கிராமங்களில் இருந்து மக்கள் இயல்பாகவே சுதந்திர வர்த்தக வலயத்திற்கு தொழிலுக்கு வரப்பட்டனர். அதிகரித்துச் செல்லும் தொழிற்படையினால், போதுமானளவு வேலைவாய்ப்பு மேற்கொள்ளப்பட்டாலும், அதற்கு ஒப்பீட்டளவில், தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி, உட்கட்டமைப்பு வசதி என்பவற்றில் அபிவிருத்தி ஏற்படவில்லை. மேலும், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுதல் மற்றும் ஊதிய வேறுபாடுகள் என்பவற்றைப் போன்று, வீதியில் இடம்பெறும் துர்ப்பிரயோகங்கள்

போன்ற மூவகை அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கு இங்கு தொழில்புரிந்த இளம் பெண் தொழிலாளர்களுக்கு நேர்ந்தது. டாபிந்து பத்திரிகையினூடாக நிறுவனத்தினுள் இடம்பெறும் அநியாயங்கள், விடுதி பிரச்சினை மற்றும் வீதிகளில் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ச்சியாக வெளியானதுடன், அன்றாட வாழ்க்கையின் அனுபவங்களை பகிர்வதற்கு மற்றும் சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும் ஓர் உதவிக்கரமாக இருந்தது. அத்தோடு டாபிந்து பத்திரிகையானது தொழிலாளர்களின் ஆக்கப்பூர்வமான திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு மற்றும் மேம்படுத்திக் கொள்வதற்கு ஓர் புகலிடமாக இருந்தது. டாபிந்து அறிக்கைகளை வைத்து மிரட்டும் ஆட்சியாளர்கள் சட்ட நடவடிக்கைகளைப் போன்று எமக்கு உயிர் அபாயங்களை மேற்கொள்ளவும் தயங்கவில்லை. இவ்வாறான பல்வேறு வகையான மிரட்டல்கள் மற்றும் சவால்களைக் கடந்து நாம் சளைக்காமல் முன்னோக்கி எமது பயணத்தை தொடர்ந்தோம்.

1985ம் ஆண்டு சுதந்திர வர்த்தக வலயமானது பியகம பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், பெண்ணியற் கல்வி மற்றும் பயிற்சிபெறும் நிறுவனமாக நாம் பியகவை நோக்கி விரிவடைந்தது, பியகமவில் நிறுவப்பட்ட முதன்மையான பெண் அமைப்பொன்றாகவே ஆகும். இதற்கிடையில் பியகம வர்த்தக வலயத்தில் வெவ்வேறு தொழிற்சாலைகளில் இடம்பெற்ற தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் போது அவ்வேலைநிறுத்த போராட்டத்தை வெற்றிகரமான முறையில் முன்னெடுப்பதற்கு எமது இன்றியமையாத பங்களிப்பை எமது உழைப்பின் மூலம் மற்றும் நிதி உதவிகள் மூலம் வழங்கினோம். டாபிந்து பத்திரிகைக்கு ஒத்தமையாக ஆண்-பெண் பாலினம் மற்றும் மற்றும் ஆண்-பெண் சமத்துவம், தொழிலாளர் உரிமைகள், தொழிற்சார் ஆரோக்கியம், இனப்பெருக்க அமைப்பு போன்றவை தொடர்பாக அறிவுறுத்தும் கைந்நூலும் வடிவமைக்கப்பட்டது. அத்தோடு தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக சுயதொழிற் பயிற்சி, ஆங்கில மற்றும் கணினி கற்கைநெறிகள் மற்றும் தற்பாதுகாப்புப் பயிற்சி, வெளிப்பாட்டு செயற்றிட்டங்கள், இளைஞர் முகாம்கள் , மருத்துவ பரிசோதனைகள் என்பன முன்னெடுக்கப்பட்டன. தொழிலாளர் போராட்டங்கள் மற்றும் வெவ்வேறு சமூக நிதி நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதற்காக பெண் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கும் ஆதரவை வழங்கினோம். தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக, சமாதானம் மற்றும் மனித உரிமைகள், பெண் உரிமைகள், பெண்ணிய சித்தாந்தங்கள், ஜனநாயகத்தினுள் பெண்களுக்குள்ள வகிபங்கு எனும் தலைப்பின் கீழ் சமுதாயத்தினுள் உரையாடலொன்றை ஏற்படுத்துவதற்கு நாம் தோள்கொடுத்தோம்.

அஞ்சல் யுக காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழ் தொழிலாளர்கள் சுதந்திர வர்த்தக வலயத்தை நோக்கி புலம்பெயர்ந்ததுடன், சிங்கள மொழியை அறிந்திராத அம்மக்களுக்காக தமிழ் மொழியிலான துண்டுப்பிரசுரம், கைந்நூல் மற்றும் டாபிந்து பத்திரிகையை அச்சிட்டு பகிர்ந்தளித்தோம். இதன் பிரதிபலனாக, 2016ம் ஆண்டில் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் டாபிந்துவின் பணி பரவலடைந்தது. தொழிலாளர்களை அறிவுறுத்தும் செயற்றிட்டம், தலைமைத்துவ பயிற்சி, மருத்துவ பரிசோதனை போன்ற செயற்றிட்டங்களின் மூலம் அவர்களின் அறிவு, தலைமைத்துவ திறன்கள் என்பவற்றை மேம்படுத்த எம்மால் முடிந்தது. மேலும், பங்குதாரர்களின் கூட்டம் மூலம் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரச நிறுவனங்களுடன் தொடர்பை மேற்கொண்டு அறிவுறுத்தும் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு படிமுறைகளை மேற்கொண்டோம்.

2020ம் ஆண்டில், உலகையே வாட்டியெடுத்த கொவிட்தொற்று காலத்தில் தொழிலாளர்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் மற்றும் இன்னல்களை முன்வைப்பது மட்டுமன்றி, சட்டவிரோதமான தனிமைப்படுத்தல் செயற்றிட்டங்களின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு டாபிந்து முன்னோடியாகவிருந்தது. அதுமட்டுமன்றி, தொழிலாளர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளையும் வழங்குவதற்கும் நாம் முயற்சிகளை மேற்கொண்டோம். இதனூடாக அதிகரிக்கப்பட்ட அங்கத்துவத்துடன், டாபிந்து தனது பயணத்தின் மற்றுமொரு திருப்புமுனையை 2021ம் ஆண்டில் டாபிந்து கூட்டு ஒன்றியம் எனும் பெயரில் தன்னை ஓர் தொழிற்சங்கமாக பதிவு செய்வதனூடாக அடைந்து கொண்டது.

கொவிட் தாக்கம் மற்றும் பல ஆண்டுகாலமாக இருண்ட அரசியல் தீர்மானங்களின் மூலம் நாட்டினுள் பீறிட்டெழுந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தொழிலாளர்கள் மேலும் மேலும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஊபொது சமூக சமையலறை போன்ற புதிய நிவாரண செயற்றிட்டமொன்றை தொழிலாளர்களுக்காக முன்னெடுப்பதற்கு எம்மால் முடிந்தது. அத்தோடு 2022ம் ஆண்டில் பெரும்பாலான மக்கள் என்ற வகையில் ஊழல்மிக்க ஆட்சியாளர்கள் மற்றும் அரசியல் முறைமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு டாபிந்துவானது, தனது அயராத பங்களிப்பை வழங்கியது. இம்முறை டாபிந்து தனது 39வது ஆண்டுவிழாவை இரத்த வியர்வையினூடாக தாம் வென்ற தொழிலாளர் நீதிகளை அடக்குமுறைக்குட்படுத்தும் ஓர் முயற்சி மட்டுமன்றி, பல ஆண்டுகாலமாக தாம் சேர்த்து வைத்து வந்த ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளும், கடன்சுமையை செலுத்துவதற்காக உபயோகிக்கப்பட்ட வழிமுறைகளுக்கு எதிராக மேற்கொண்ட போராட்டமாகும். இவ்வளவு தூரம் நாம் வந்த பயணப்பாதையினூடாக எமது ஜாதி, இனம், மதம், வகுப்பு போன்றவற்றை கருதாது எமது பணியை மேற்கொண்டோம். கடந்த 38 ஆண்டுகளாக, எம்மைச் சூழ்ந்திருந்து, டாபிந்து கூட்டமைப்பை சக்திப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கிய கூட்டமைப்புக்கள் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

# கடன் மறுசீரமைப்பு மற்றும் தொழிலாளர் சட்டத்தில் முன்மொழியப்பட்ட புதிய சீர்த்திருத்தங்கள்



நிகழ்கால அரசாங்க சூழ்நிலைக்கு ஏற்ப புதிய தொழிலாளர் சட்ட சீர்திருத்தம் மற்றும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் நேரடி தாக்கமானது தொழில்புரியும் மக்களின் மேல் சுமத்த்ப்பட்டிருப்பதுடன், அதன் தாக்கமானது, கலந்துரையாடலை மேற்கொள்வதன் அவசியத்தை மற்றும் அதன்மூலம் நிகழவிருக்கும் தவறான செயல்கள், அடக்குமுகைள் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக அமைப்பு ரீதியாக ஈடுபடுவதன் அவசியமானது, தொழிற்சங்கப் பிரிவின் மூல காரணியாகத் திகழும் பெண்தொழிலாளர்களுக்குள்ள கடமையாகும். ஊழியர் சேமலாப நிதியை வட்டி விகிதங்களின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தலின் மூலம், இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருப்பது, குறைந்த வட்டி விகிதங்களிலாகும். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றதென்பது தொடர்பாக கபினட் சபைக்கு ஒப்பந்தமொன்று முன்வைக்கப்பட்டது. இந்த புதிய சீர்த்திருத்தம் மற்றும் EPF – ETF கொள்ளைக்கு எதிரான போராட்டம் மற்றும் விருப்பமின்மையை தெரியப்படுத்துவதற்காக டாபிந்து கூட்டமைப்பானது, சுதந்திர வர்த்தக வலய ஒன்றியம் மற்றும் ஒன்றிணைவோம் எனும் குழுக்களுடன் இணைந்து அமைப்புரீதியிலான செயற்றிட்ட போராட்டங்களை கடந்த சில மாதங்களாக முன்னெடுதத்னர். டாபிந்துவானது இவ்வனைத்து செயற்றிட்டங்களையும் டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் கீழ் மேற்கொண்டது எனக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். டாபிந்து கூட்டு ஒன்றியமானது, 2021ம் ஆண்டு வைகாசி மாதம் வடக்கில் தொழில்புரியும் தொழிலாளர்களின் வேண்டுகோளின் பேரில் ஆரம்பிக்கப்பட்டதுடன், கிளிநொச்சி, வவுனியா, பியகம மற்றும் கட்டுநாயக்க பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்தில் மற்றும் ஏனைய உற்பத்திப் பிரிவுகளில் தொழில்புரியும் தொழிலாளர்களின் வாழ்க்கை மட்டத்தை முன்னேற்றுவதே டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் நோக்கமாகும்.

டாபிந்து கூட்டு ஒன்றியத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களுள் எதிர்ப்புப் போராட்டம், கையெழுத்துப் பிரச்சாரம், மனுவில் கையெழுத்திடல் மற்றும் செயலமர்வுகளை மேற்கொள்ளுதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. 2023ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி மனுவில் கையெழுத்திடல் இடம்பெற்றதுடன், ஆனி மாதம் 12ம் மற்றும் 14ம் திகதிகளில் தொழிலாளர் திணைக்களத்தின் முன்பாகவும், ஆனி மாதம் 19ம் திகதி கட்டுநாயக்க எவரிவத்த மணிக்கூட்டு கோபுரத்தின் முன்பாகவும், ஆனி மாதம் 25ம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும், போராட்டங்கள் இடம்பெற்றன. ஃஒன்றிணைவோம் என்ற சமூக அமைப்புடன் இணைந்து ஆவணி மாதம் 6ம் திகதி செயலமர்வையும், ஆவணி மாதம் 23ம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன. அத்தோடு ஆவணி மாதம் 23ம் மற்றும் 24ம் திகதி கையெழுத்து பிரச்சாரம் மற்றும் போராட்டம் மிக வெற்றிகரமான முறையில் இடம்பெற்றது. ஃஒன்றிணைவோம் எனும் அமைப்புடன் இணைந்து ஆவணி மாதம் 28ம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் ஒன்றிணைந்த போராட்டமொன்றை மேற்கொண்டனர். சுதந்திர வர்த்தக வலய பங்களிப்பு, தொழிற்சங்கம் மற்றும் சிவில் அமைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பங்களிப்புடன் புரட்டாதி மாதம் 6ம் மற்றும் 7ம் திகதிகளில் துண்டுப்பிரசுரம் விநியோகம் மற்றும் போராட்டமும் இடம்பெற்றது.

# எமது எண்ணம்

இலங்கையினுள் பெரும்பாலான மக்களால் எமது நாட்டினுள் தொழிற்சங்கத்தை அமைத்தது, நாட்டின் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்துவதற்காகும் அக்காலத்தில் இந்நாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டவர்களின் வரி செலுத்தப்படவில்லை. நாடு முழுவதும் அமைக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்க நேர்ந்ததன் காரணம், பல குறைபாடுகளுக்கு மத்தியிலாகும். தொழிலாளர்கள் என்ற ரீதியில் எமது உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தினை பெற்றுக் கொள்வதில் இன்றும் நாம் தோல்வியடைந்தவர்களாக காணப்படுகின்றோம். ஏதாவதொன்று கிடைக்கப்பெற்றிருப்பின் அது போராட்டக்காலத்தினாலாகும். அங்கு நாம் எமது உயிரை இழப்பதற்கும் நேர்ந்தது. சிலர் விபத்துக்குள்ளாயினர்.

முன்னைய காலத்தில் ஊழியர் சேமலாப நிதியை கொள்ளையடிப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டாலும், அனைத்து ஊழியர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இச்சம்பவத்தில் அனைவருக்கும் மிகக் கடுமையான விளைவுகளை சந்திக்க நேர்ந்தது. மீண்டுமொரு முறை ஊழியர்களாகிய எம்மை ஏமாற்றி, மிகவும் கொடூரமான முறையில் எமது பணத்தை கொள்ளையடிப்பதற்கு அரசாங்கம் தயாராகியது. ஐயோ ஏன் கடவுளே! எம்மையே ஏன் சோதிக்கின்றீர்? ஏமக்கென்று எஞ்சியிருப்பது, எலும்புக்கூடாகிய உடம்பு மட்டும் தான். திருமணம் முடிப்பதற்கு நாம் சேமித்து வைத்திருந்தது, எமது ஊழியர் சேமலாப நிதி பணத்தை தான். அதையும் எம் கண்முன்னே சுரண்டியெடுப்பதற்கு வழிதேடுகின்றனர். நாட்டின் மேலதிகாரிகள் மிகச் சுலபமாக சொத்தை கொள்ளையடித்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். திறந்த பொருளாதாரத்தின் பின் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசுகளின் மூலம் சூறையாடப்பட்டது, அப்பாவி மக்களின் உழைப்பை மற்றும் சம்பளத்தையுமாகும். 1948ம் ஆண்டின் பின், நாடாக சுதந்திரமடைந்தாலும், தொழிலாளர்கள் சுதந்திரம் பெறவில்லை. வயிற்றுப் பசிக்கு உணவின்றி, போடிங் வாழ்க்கைக்குள் மிகவும் துன்பகரமான வாழ்வை அனுபவித்து, தூக்கமின்றி, மேலதிக நேர வேலையில் ஈடுபட்டு, உழைப்பிற்கு ஏற்ப ஊதியமுமின்றி, சேர்த்து வைத்த பணத்தை ஊழியர் சேமலாப நிதிக்கு பறிகொடுத்தனர். நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அனைவரும் தொழிலின்றி இருக்கின்றார்கள். இத்தகைய நிலைமைக்கு மத்தியில் ஊழியர் சேமலாப நிதிக்கு ஏற்படும் கையீட்டினை தொழிலாளர்கள் பாரபட்சமின்றி சொல்லிக் காட்டுவர்.

சமந்தா

# டாபிந்துவின் 39வது ஆண்டு வாழ்த்துக்கள்

## Congratulations to Dabindu

Congratulations to Dabindu Collective on 38 years of unwavering dedication to the cause of women's rights, particularly in the garment industry. Your remarkable journey has been a beacon of hope and progress for countless women across Sri Lanka. Through your relentless efforts and commitment, you have not only empowered women but also transformed the lives of garment workers, giving them a voice, dignity, and the respect, they deserve. Your advocacy for fair labor practices, safe working conditions, and equal pay has left an indelible mark on the industry, setting an example for others to follow. As you celebrate this milestone, may you continue to inspire change, champion equality, and pave the way for a brighter future where women's rights are not just upheld but cherished. Your dedication is a testament to the power of collective action and serves as a reminder that positive change is possible. Here's to another 38 years of making a difference, breaking barriers, and standing up for the rights of women everywhere. Your work is an inspiration to us all, and we look forward to seeing the continued impact of your organization in the years to come. Warmest congratulations once again on this incredible achievement!

**Abhiramy Sivaloganathan**

வறிய மக்களின் வாழ்வுக்கு வளமூட்டிய டாபிந்துவுக்கு இனிய அகவை திருநாள் நல்வாழ்த்துக்கள்!

**நிக்சன்**

39வது அகவையில் காலடியெடுத்து வைக்கும் டாபிந்துவிற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**ஏஞ்சல்**

ஆடைத் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க முனைகின்ற டாபிந்து கூட்டமைப்பிற்கு 39வது அகவை நல்வாழ்த்துக்கள்!

**ரினூகா**

39TH ANNIVERSARY

விடியும் பொழுதில் வியர்வையாய் வந்த பனித்துளி
காலை பொழுதில்
நான் கண்விழித்தபோதே
என் கண் எதிரே
வந்தாய் வியர்வைத்துளியாய்

உன் சேவைகள் பலவிதம்
நமக்குக் கிடைத்த நன்மைகள் ஒருவிதம்
அதில் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள்
ஏராளமாம் ஏராளம்

நிறைவான நிறையுணவை
எம் ஊழியருக்கு நீ தந்தாய்
நிமிர்ந்து நின்று நாம் உண்டு
மகிழ்ந்தோம் எம் வியர்வைத்துளியே

காலம் கடந்து சென்றாலும்
எம்மை உன் அன்பு மொழியில்
காதலித்தாய் - உன் அன்பை நான்
என்றும் மறவேன் வியர்வைத்துளியே

**டிலக்ஷனா**

டாபிந்து நீ பெண்களின்
அறிவுக்கண்களை திறந்தாய்
சமூகத்தில் தலை நிமிர்ந்து
நிற்க ஆதரவும் தந்தாய்

வறிய மக்களுக்கு - உரிய
நேரத்தில் பசி போக்கினாய்
எமது சிறுவர்கள் கல்வி சிறக்க - நீ
கரம் கொடுத்தாய்

பெண் தினமாம் மகளிர் தினத்தை
தவறாது கலை - கட்டி
கொண்டாட்டத்துடன் நிற்கின்றாய்
மகிழ்ச்சியும் கண்டாய்

அறுசுவை உணவும் தந்தாய்.. பரிசும் தந்தாய்
தேவைக்கு ஏற்ப பயிற்சியும் தந்தாய்
அது மட்டுமா? உன் பணி சொல்லிக்கொண்டே போகலாம்
உன் பணியில் நீ சிறந்து நானும் உதவுவேன்

**ஜெயசாந்தன் சிவரூபி**

# டாபிந்துவின் 39வது ஆண்டு வாழ்த்துக்கள்

டாபிந்து கூட்டமைப்புடன் நான் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்புகொண்டு வருகின்றேன். இந்த கூட்டமைப்பானது, அடிமட்ட நிலை மக்களுடன் இணைந்து தொழில்புரிவதுடன், விசேடமாக ஆடைத்தொழிற்சாலைப் பிரிவில் தொழில்புரியும் பெண்தொழிலாளர்களுக்காக, பாரிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை. இது மிகச்சிறிய பெண் குழுவைக் கொண்ட அமைப்பாக காணப்பட்டாலும், இக்குழு சமூக அநீதிகளை மிகப் பயமின்றி தட்டிக் கேட்பவர்களாக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான குழுக்கள் இலங்கையில் முழு மக்களுக்காகவும், அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு மத்தியில் சளைக்காமல் செயற்படும் சகோதரி சமிலா துஸாரி மற்றும் பெண் குழுவிற்கு மென்மேலும் இப்பணியைத் தொடர்வதற்கு பலம் கிடைக்க வேண்டும் எனக்கூறி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜேசுதாஸன்**

டாபிந்து பத்திரிகையை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றமை தொடர்பிலும், வர்த்தக வலய பெண்களை ஊக்கமளிப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை. உங்களது எதிர்கால பயணத்திற்கு எமது வாழ்த்துக்கள்.

**சிறிமல் பீரிஸ்**

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் பெண்களுக்காக கடந்த 38 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் டாபிந்து கூட்டமைபப்பிற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை கூறிக் கொள்கின்றேன்.

உங்களது அசைக்க முடியாத மாபெரும் ஆற்றலின் மூலம் பெண் தொழிலாளர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, வலுவான மற்றும் மிகவும் பயனுள்ள வழிமுறைகளை உருவாக்குவதற்கு நீங்கள் பங்களித்துள்ளீர்கள்.

இக்கூட்டமைப்பின் ஸ்தாபகரான திருமதி. சுமன்மலி மற்றும் கூட்டமைப்பின் நிறைவேற்று இயக்குனராக பணியாற்றும் திருமதி சமிலா துஸாரி உட்பட அனைத்து அலுவலகர் குழுவினரின் அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பினை நான் பெரிதும் மதிக்கின்றேன்.

**ராய் பல்தஸார்**

டாபிந்து கூட்டமைப்பு செய்து வரும் விலைமதிப்பற்ற பணிக்கு எனது வாழ்த்துக்களை கூறிக் கொள்வதுடன், எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் முயற்சிகள் எங்கள் அனைவருக்கும் ஊக்கமளிக்கினறது.

**ஜனனி**

நீதி மற்றும் சமத்துவத்திற்காக இரவு பகல் பாராது, தம்மை முழுமையாக அர்ப்பணித்து உழைக்கும் டாபிந்து கூட்டமைப்பிற்கு எமது வாழ்த்துக்கள்!

**விஜி**

தந்தையின்றி தவித்த - எம்
செல்வங்களுக்கு - பகுதிநேரக்
கல்வியை உன் பணியாய் - நீ
வழங்கினாய் எம் வியர்வைத்துளியே

உன் சட்ட சேவையில் - சட்டங்களையும்
ஊரிமைகளையும் தலைமைத்துவ
பண்புகளையும் வியர்ந்த - வியர்வைத்துளி
வாசனையுடன் எமக்கே அளித்தாய்

வீறுகொண்டு வீரநடைபோட்டு
வியர்வைத்துளி வீரம் உள்ள - துளியென
உம்மை நம்பி வந்தோருக்கு
நீ யாரென காட்டினாய்

வியர்வை துளிகள் வீணாக கூடாது
என்று எம் உரிமைகளுக்காக
குரல் கொடுப்பதற்காக
யூனியனில் நாம் இணைந்தோம் உன்னோடு

இத்தோடு மட்டுமல்ல உன் சேவை
இன்னும் நூறாண்டு காலம் தொடர
இந்த இனிய பிறந்த தினதத்தில்
வாழ்க வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றேன்.

**கஜனி**

# ஓராண்டுப் பணி



பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆடைத்தொழிற்சாலையில் தொழில்புரியும் பெண்களுக்காக முன்னிற்பது, ஓர் சமூக சேவை கூட்டமைப்பு என்ற ரீதியில் டாபிந்துவாகிய எமது முதன்மைப் பணிகளுள் ஒன்றாகும். டாபிந்து கூட்டமைப்பானது, பெண் தொழிலாளர்களை இலக்காகக் கொண்டு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. தனி மற்றும் குழு முறையிலான செயற்றிட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்படுவதுடன், உரையாடல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண் தொழிலாளர்கள் மிக ஆர்வத்துடன் இப்பயிற்சிகள் மற்றும் செயற்றிட்டங்களில் பங்குபற்றியதுடன், தமது அனுபவங்கள் மற்றும் வேலைத்தளத்தில் மற்றும் அன்றாட வாழ்க்கையில் அவர்கள் முகங்கொடுக்கும் இன்னல்களை பகிர்ந்து கொண்டனர். இங்கு முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களாக,

1. பணித்தளத்தில் பெண்களின் உளநல ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஆலோசணை செயற்றிட்டம்
2. தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முறைசாரா கலந்துரையாடல்
3. டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் பணிக்குழு கூட்டம்
4. டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் இருநாள் மூலோபாய செயற்றிட்டம்
5. பெண் தொழிலாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு திட்டம்
6. டாபிந்துவாகிய எம்மிடமிருந்து உங்களுக்கு - பொது சமையலறை

பெண்தொழிலாளர்களை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள், இவ்வாண்டில் கட்டுநாயக்க, பியகம, வவுனியா மற்றும் கிளிநொசசி ஆகிய பிரதேசங்களில் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இங்கு சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர, இலங்கை வங்கி தொழிற்சங்கத்தின் முன்னாள் சிரே'ட ஆலோகசர் திரு. கேசர கோட்டேகொட, உளநல ஆலோசகர். கங்கா ரத்நாயக மற்றும் சட்டத்தரணி சுவஸ்திகா ஆறுலிங்கம் ஆகியோர் வள ஏற்பாட்டாளர்களாக கலந்து கொண்டு செயற்றிட்டங்களை மேற்கொண்டனர். இங்கு பிரதானமாக பெண்தொழிலாளர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது பற்றி கலந்துரையாடப்பட்டது. மேலும் நாட்டில் நிலவும் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் சம்பள வெட்டு மற்றும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு, வேலைச்சூழலில் ஏற்படும் தொழிலாளர் உரிமை தொடர்பாக ஊழியர்களுக்கு தெரிவுபடுத்துதலும் இடம்பெற்றது. மேலும், தொழிலாளர்கள் என்ற ரீதியில் வெல்லவேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டு உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான பெண் தொழிலாளர்கள் தமது ஊர்களை விட்டு இங்கு வருகைதந்து தொழிற்சாலைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றார்கள். மிகவும் வறுமை நிலை, மேலதிக வேலை மற்றும் சம்பள வெட்டுதலுக்கு மத்தியில் பொருளாதார ரீதியாக மற்றும் மன ரீதியாக உடைந்து கிடக்கும் இப்பெண்களுக்கு இச்சேவையின் தேவையானது மிகவும் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றதாக செயற்றிட்ட முடிவில் தெரியவந்தது.














# மலையக தொழிலாளர்களின் சமத்துவத்தைக் கோரி டாபிந்துவாகிய நாம்...




"மலையக எழுச்சி பயணம்" எனும் கருப்பொருளின் கீழ் மலையக மக்களின் உரிமைகள் தொடர்பாக எதிர்காலத்தில் ஓர் பேசும் பொருளாக காட்சியளிக்கப்படும் நடைப்பயணமாகும். அது இலங்கையின் சுதந்திரம் மற்றும் சமத்துவ பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு மலையக மக்களின் வேண்டுகோளின் பேரில், மலையக மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டிற்கு வருகைதந்த நாள் முதல் அவர்கள் தம் வாழ்வைக் கொண்டு நடத்துவதற்காக போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையில் மற்றும் முதன்மை மக்கள் குழுவொன்றாக ஏற்றுக் கொண்டு சமத்துவ ஏற்புடைமையைக் கோரி அடிக்கடி ஆட்சிக்கு வந்த அரசாங்கததிற்கு முன்வைக்கப்பட்ட கடினமான முறையீடுகளினால் இந்நடைப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இது ஏனைய பிரதான மக்கள் மற்றும் ஒத்தமை சுயாதீன மக்கள் குழுவொன்றின் அடையாளத்தை ஏற்படுத்துவதற்காக இம்மக்களின் போராட்டம் பதிலளித்தது. மலையக தமிழ் மக்களின் வரலாறு, போராட்டம், வெற்றி, அவர்களின் ஒத்துழைப்பு, நிகழ்கால சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமை மற்றும் அபிலாசைகள் தொடர்பில் இலங்கை சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சகோதர மக்களுக்கிடையில் அடிப்படை புரிந்துணர்வை ஏற்படுத்துவது இந்நடைப்பயணத்தின் நோக்கமாக இருந்தது. தலைமன்னார் முதல் மாத்தளை வரை 16 நாட்கள் இடைவிடாது, நடைப்பயணமாக மேற்கொண்ட பயணத்திற்கு டாபிந்து கூட்டமைப்பைச் சேர்ந்த நாமும் ஆவணி மாதம் 16ம் திகதி நாலந்த முதல் மாத்தளை வரையான அவர்களின் நடைப்பயணத்தில் நாமும் கலந்து கொண்டு அவர்களின் குடியுரிமையை வெல்வதற்கான மனிதாபிமான முறையில் எமது பங்களிப்பை வழங்கினோம்.







# பியகமவில் டாபிந்துவின் கிளையொன்று திறந்தவைக்கப்பட்டமை



தொழிலாளர் உரிமைகளுக்காக முன்னிற்கும் டாபிந்து கூட்டமைப்பில் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளுக்காக ஷீடாபிந்து கூட்டு ஒன்றியம் எனும் பெயரில் புதிய கிளையொன்றை கடந்த ஆனி மாதம் 25ம் திகதி பியகமவில் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு தொழிலாளர்களின் நீண்டகால வேண்டுகோளின் பேரில், ஆரம்பமாகும் இத்தொழிற்சங்கத்தில் தொழிலாளர்கள் முகங்கொடுக்க நேரிடும் உரிமை மீறல்கள் தொடர்பாக ஆலோசணை செயற்றிட்டம் மற்றும் சட்ட ஆலோசணையும் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பெண் தொழிலாளர்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள விதத்தில் கழிப்பதற்காக புத்தகசாலையொன்றையும் நடத்திச் செல்வதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். இதற்கமைய, டாபிந்து கூட்டமைப்பு மற்றும் டாபிந்து கூட்டு ஒன்றியம் சார்பாக தொழிலாளர் உரிமைகளுக்காக சட்டதிட்டமொன்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனூடாக தொழிலாளர்களின் உரிமை தொடர்பாக அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக மற்றும் உரிமை மீறல் தொடர்பாகவும் டாபிந்து கூட்டு ஒன்றியம் சார்பில் முன்னிற்பதை நோக்காகக் கொண்டு பியகமவில் புதிய கிளையொன்று திறந்து வைக்கப்பட்டது.



# ஒருவருட காலப் பயணம்




இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஜ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.